முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1201

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

12.01.2023, வியாழக்கிழமை

1. சரவணச்சுடரேற்றி உலகோர்க்கு
சற்குருவாய் மாவேதம் அருளுகின்ற அரங்கனே
பிரணவக்குடில் படைத்து உலகோர்க்கு
பசிபிணி அனைத்தும் விரட்டுகின்ற
2. விரட்டுகின்ற மகா சித்தி அருளும்
மாதவராஜனே ஞான தேசிகனே
பூதலத்தில் அரங்கன் உமக்கு சித்திகூட
புண்ணியபலம் உலகமெங்கும் பெருகி நிற்க
3. நிற்கவே உன்வழி உலகோர்
ஞானம் உயர்வுபட பெற்று ஞானிகள் ஆக
தயவாக முருகப்பெருமான் யானும்
தவராஜனுக்கு ஞான அறிவுரை ஆசிதன்னை
4. ஆசிதன்னை சுபகிருது சிலை திங்கள்
(சுபகிருது வருடம் மார்கழி மாதம் 28 ம் நாள் 12.01.2023, வியாழக்கிழமை)
ஆற்றல்பட இனிதே எடுத்துரைப்பேன்
மாற்றம் நடக்கவேண்டி கலியுகத்தில்
மகா சூட்சும சக்தி தனை வழங்கிவர
5. வருகின்ற அரங்கன் தொடர்பின் வழி
வையகமே புதுமை காணக்கூடும்
தருகின்ற அரங்கத்தின் மகா தவசக்தி மூலம்
தரணியே புதுமை கண்டிட நேரும்
6. நேர்மைகொண்டு அரங்கனின் ஞான வழிகளை ஏற்றால்
நீதிமான்களாக உலகோர் மாற நேரும்
வறுமை விலகி இந்த வையகமே
வளர்ச்சி மாற்றம் காணக்கூடும்
7. கூடவே அரங்கன் தவசித்திக்கு குறையில்லா மகா சக்திகளை ஆறுமுகள் இணைத்துவர
பெருமைகொண்டு அரங்கனுக்காய் உலகோர் எடுக்கும் பெருவிழா அனைத்திலும் ஆறுமுகன்யான்
உறுதிதந்து வரமாக மக்களுக்கு
உயர் ஞானம் தந்து அற்புதம் நடத்துகின்றேன்
8. ஆகவே அரங்கமகானை நோக்கி
அகிலத்தார் செய்யும் அன்னதானமும் சரி
அனைத்து விழாக்களும் சரி
ஆறுமுகன் என்னால் அங்கீகரிக்கப்பட்டு
9. அந்தவித தருணத்தில் அனைவருக்கும் வரமாக
சூட்சும தீட்சைகளும் மகா பலமும் வளமும்
அரங்கன் கரம்பட உலகோர்க்கு
ஆறுமுகப்பெருமான் யான் அருளுகின்றேன்

10. ஆகவே அரங்கன் வழி உலகோர் வர
அனைத்தும் வெற்றியாக மாறி
செகமே ஞானத்தலைமை காணும்
சித்தி மிகுந்த ஞான ஆட்சி பெறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–